தினமணி

## விவசாயிகளுக்கு பயனளிக்காத வேளாண் சேவை மைய இயந்திரங்கள்!

- கே. விஜயபாஸ்கர் -

First Published : 25 Feb 2012 03:25:19 AM IST



கரூர்: தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வேளாண் சேவை மையம் அமைக்கும் திட்டம், உரிய திட்டமிடுதல் இல்லாததால் பயனற்றுப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயப் பணிகளுக்கு தொழிலாளர்கள் கிடைப்பதில் நிலவும் சிரமத்தைப் போக்கும் விதமாக, அரசு இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

விவசாயப் பணிகளில் தொழிலாளர் பற்றாக்குறையைப் போக்க 100 நாள் வேலை உறுதித் திட்டப் பணியாளர்களை பயன்படுத்திக்கொள்ள மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், இதற்கு இதுவரை சாதகமான பதில் இல்லை.

விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறையால் விவசாயப் பணிகள் முடங்கும் நிலை ஏற்படுள்ளதைத் தவிர்க்க, தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்களில் வேளாண் கருவிகளை வாங்க அதிகபட்சமாக ரூ.20 லட்சம் வரை மானியம் வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். அதன்படி, தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்களில் வேளாண் சேவை மையங்களை அமைத்து, வேளாண் இயந்திரங்களை வாங்கி விவசாயிகளுக்கு வங்கிகள் குறைந்த வாடகைக்கு கொடுக்கும். இதற்காக, இயந்திர மதிப்பில் 50 சத மானியத்தை அரசு வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில், விவசாயப் பணிகளை இயந்திரமயமாக்கும் தமிழக அரசின் முயற்சி விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

விவசாயப் பணிகளில் உரிய காலத்தில் நடவு, அறுவடைப் பணி மேற்கொள்வது மிகவும் அவசியம். இந்தப் பணிகள் தொழிலாளர்கள் பற்றாக்குறையால் தாமதமாகும் பட்சத்தில் மகசூல் குறையும் வாய்ப்புள்ளது.

இதனால், வேளாண் சேவை மையங்களில் நெல் நடவு இயந்திரம், அறுவடை இயந்திரம், கரும்பு வெட்டும் இயந்திரங்களை வாங்கினால், தொழிலாளர்கள் பற்றாக்குறையால் தடுமாறும் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். ஆனால், முதல்வர் அறிவித்துவிட்டார் என்பதற்காக வேளாண் சேவை மையங்களைத் தொடக்கி, டிராக்டர், களை எடுக்கும் இயந்திரம், மினி டிராக்டர் போன்றவை வாங்கப்பட்டுள்ளன.

இப்போது, தமிழகத்தில் டிராக்டர்கள் இல்லாத கிராமங்களே இல்லை. இந்தச் சூழ்நிலையில், தெரிந்தே முதலீட்டை வீணடிக்கும் வகையில் டிராக்டர்கள் வாங்கி நிறுத்துவதால், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் நிதிச்சுமை மேலும் அதிகரிக்கும்.

மேலும், களை எடுக்கும் இயந்திரம், கரும்பு கட்டை வெட்டும் இயந்திரங்களின் பயன்பாடும் மிகவும் குறைவு.

விவசாயிகளுக்கு பயனளிக்காத இயந்திரங்களை வாங்கி அரசின் திட்டத்தையும், முதலீட்டையும் வீணடிப்பதைவிட, விவசாயிகளுக்கு பயன் அளிக்க கூடிய நெல் நடவு இயந்திரம், அறுவடை இயந்திரம், கரும்பு வெட்டும் இயந்திரம் ஆகியவற்றை வாங்கி இந்தத் திட்டத்தை செம்மையாகச் செயல்படுத்த வேண்டும். ஒரு சில மாவட்டங்களில் வேளாண் சேவை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இங்கு உள்ள இயந்திரங்கள் பெரும்பாலானவை பயனற்ற நிலையிலேயே உள்ளன.

இதுவரை வேளாண் சேவை மையங்களைத் தொடங்காத மாவட்டங்கள், நிதி நிலையில் ஓரளவு நல்ல நிலையில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் மட்டும் இந்த மையங்களைத் தொடங்க முன் வரவேண்டும். அரசு அதிகபட்சமாக ரூ. 20 லட்சம் மானியம் வழங்குகிறது. இதே அளவு தொகையை வங்கிகள் கொடுக்கும் பட்சத்தில், தொழிலாளர்கள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட விவசாயப் பணிகளுக்கு உதவும் இயந்திரங்களை வாங்கிக்கொள்ள முடியும்.

இதன்மூலம், விவசாயிகளுக்கு உதவுவதோடு, வங்கிகளுக்கு நிரந்தர வருமானம், இயந்திரங்களை இயக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

இதுகுறித்து தொடர்புடைய அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகும்.

## ஒட்டுப்புல் சாகுபடி பயிற்சி

First Published : 24 Feb 2012 01:48:58 PM IST

காரியாபட்டி, பிப். 23: அருப்புக்கோட்டை அருகே கோவிலாங்குளத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு கோ (சி.என்-4) கம்பு நேப்பயிர் ஒட்டுப்புல் சாகுபடி பயிற்சி நடைபெற்றது.

திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டி பயிற்சியைத் தொடக்கி வைத்தார். உதவிப் பேராசிரியர் ராதிகா கோ(சி.என்)-4 கம்பு நேப்பயிர் ஒட்டுபுல் சாகுபடி தொழில் நுட்பங்களான விதை கரணைத் தேர்வு, விதையளவு, பயிர் இடைவெளி, உரம், நீர் மற்றும் களை நிர்வாகம் போன்ற அனைத்து தொழில்நுட்பத்தையும் விளக்கமாகக் கூறி செயல் விளக்கமாகவும் செய்து காண்பித்தார்.

இதனைச் சாகுபடி செய்தால், கால்நடைகளின் பசுந்தீவன தேவையை நிவர்த்தி செய்வதோடு, பால் உற்பத்தியையும் அதிகரித்து கால்நடை வளர்ப்பை லாபகரமான தொழிலாக மேற்கொள்ளலாம் என்றார்.

## "இயற்கை விவசாயத்திற்கான தொலைநோக்குத் திட்டம் தேவை'

First Published : 24 Feb 2012 03:05:14 PM IST

பட்டுக்கோட்டை, பிப். 23: ஆண்டுதோறும் நீர் பற்றாக்குறை, குறைவான மழை ஆகிய பிரச்னைகளில் சிக்கியுள்ள தமிழகத்தின் எதிர்கால தண்ணீர்த் தேவைகளை கவனத்தில் கொண்டு, தமிழக விவசாயிகள் நிலையான, நீடித்த ரசாயனமற்ற இயற்கை விவசாயத்திற்கு மாறும் வகையில், தொலைநோக்குடன் கூடிய கொள்கைத் திட்டத்தை அறிவிக்க வேண்டுமென தமிழக அரசுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பட்டுக்கோட்டையில் தமிழ்நாடு அரசு நீர், நிள வளத் திட்டத்தின் சார்பில் புதன்கிழமை நடைபெற்ற சுற்றுச்சூழல் சமூகப் பாதுகாப்பிற்கான வேளாண் விழிப்புணர்வு மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டுக்கு திருச்சி பொதுப் பணித் துறை நீர்வள ஆதாரத் துறை, சுற்றுச்சூழல் குழும வட்டக் கண்காணிப்புப் பொறியாளர் ப. ராஜேஸ்வரி தலைமை வகித்துப் பேசி, மாநாட்டு சிறப்பு மலரை வெளியிட, தஞ்சை பொதுப்பணித் துறை நீர்வள ஆதாரத் துறை, கீழ்காவிரி வடிநில வட்டக் கண்காணிப்புப் பொறியாளர் சோ. அசோகன் பெற்றுக் கொண்டார்.

பொதுப் பணித் துறை நீர்வள ஆதாரத் துறை செயற்பொறியாளர்கள் இரா. இளங்கோவன் (கோவை), மாதவன் (பட்டுக்கோட்டை), மதுரை கால்நடை மருத்துவர் ராஜமாணிக்கம், ஒரத்தநாடு இயற்கை உழவர் இயக்கத் தலைவர் பொறியாளர் ராமசாமி, நமது நெல்லைக் காப்போம் இயக்க ஒருங்கிணைப்பாளர் திருத்துறைப்பூண்டி இரா. ஜயராமன், முன்னோடி

இயற்கை விவசாயி பள்ளத்தூர் முருகையன், பொள்ளாச்சி சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் மா. ரேவதி, அரச்சலூர் செல்வம் உள்ளிட்டோர் பேசினர்.

மாநாட்டில், தமிழகத்தில் பூச்சிக்கொல்லி பயன்பாட்டை 4 ஆண்டுகளுக்குத் தடை செய்ய வேண்டும். பூச்சிக்கொல்லிகள் இல்லாத விவசாயம் குறித்த விழிப்புணர்வை ஆண், பெண் சுய உதவிக் குழுக்கள் மூலம் ஊக்குவிக்க வேண்டும்.

ரசாயனம் இல்லாத விவசாயத்தால் மட்டுமே உயிருள்ள மண் உருவாகிறது. எனவே, இயற்கை விவசாயத்திற்கு மாறும் விவசாயிகளுக்கு தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அரசு தாராளமாக மானியம் வழங்க வேண்டும். மேலும், சமூக நன்மைக்காக மறைமுகமாக உதவும் இந்த விவசாயிகளுக்கு, ஆண்டுதோறும் ஏக்கருக்கு ரூ. 10,000 ஊக்கத்தொகை வழங்க வேண்டும்.

மழைநீர் சேகரிப்பை ஊக்குவித்து, அதை நிலத்தடி நீராக மாற்ற அனைத்து விவசாய நிலங்களிலும் பண்ணை மழைநீர் குட்டைகள் அமைக்க அரசு உதவ வேண்டும். நீர் வளங்களை ஆழப்படுத்தும் பணிகளை அங்குள்ள ஆயக்கட்டுதாரர்களிடம் வழங்க வேண்டும். பாசிக் குத்தகையை ரத்து செய்து, மீன் குத்தகையை பாசனதாரர்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கரூர் சுற்றுச்சூழல் குழும உள்கோட்ட உதவிச் செயற்பொறியாளர் கோ. பாலசுப்பிரமணியன் வரவேற்றார். கோவை உயிர்ச்சூழல் கூட்டமைப்புச் செயலர் சா. கதிரேசன் நிகழ்ச்சியைத் ஒருங்கிணைத்தார்.

திருச்சி பொதுப் பணித் துறை நீர்வள ஆதாரத்துறை இளம் பொறியாளர் க. ராஜகோபால் நன்றி கூறினார்.

மாநாட்டில் பாசன விவசாய சங்க உறுப்பினர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் கலந்து கொண்டனர். மாநாட்டையொட்டி கண்காட்சி, படக்காட்சி நடத்தப்பட்டன.

## "4,79,257 மெட்ரிக் டன் நெல் கொள்முதல்'

First Published : 24 Feb 2012 03:09:44 PM IST

திருவாரூர், பிப். 23: திருவாரூர் மாவட்டத்தில் பிப். 22 வரை 4,79,257 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

திருவாரூரில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு தலைமைவகித்து மேலும் அவர் பேசியது:

திருவாரூர் மாவட்டத்தில் நிகழாண்டு சம்பா, தாளடியில் 1,46,741 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. 46,900 ஹெக்டேரில் உளுந்துப் பயறு, 28,237 ஹெக்டேரில் பயறு வகைகளும், 4,670 ஹெக்டேரில் இறவை பாசனத்தில் உளுந்து, 3,176 ஹெக்டேரில் நிலக்கடலை, 184 ஹெக்டேரில் எள் சாகுபடி செய்யப்பட்டது.

23.2.2012 வரை சம்பா பருவத்தில் 1,00,630 ஹெக்டேர், தாளடி பருவத்தில் 19,370 ஹெக்டேர் என மொத்தம் 1,20,000 ஹெக்டேரில் அறுவடை மேற்கொள்ளப்பட்டு, அதிகப்பட்ச மகசூலாக ஹெக்டேருக்கு 9,444 கிலோவும், சராசரி மகசூலாக 7,083 கிலோவும் பெறப்பட்டுள்ளது.
தற்போது சம்பா மற்றும் தாளடி பருவத்தில் 26,741 ஹெக்டேரில் அறுவடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
விவசாயிகளுக்கு சாகுபடிக்கு தேவையான பயிர்க் கடன் கூட்டுறவுத் துறை மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ. 90 கோடி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ரூ. 592 கோடி என ரூ. 682 கோடி பயிர்க் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டது. இதில் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் ரூ. 87.99 கோடி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 626.24 கோடி என்று மொத்தம் பிப். 22 வரை ரூ. 714.23 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.
நிகழாண்டில் பிப். 22 வரை மாவட்டத்தில் 36,899 புதிய உறுப்பினர்களுக்கு ரூ. 152.69 கோடி பயிர்க் கடன் தேசியமயமாக்கப்பட்ட மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.
கூட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் தியாகராஜன், வேளாண்மை இணை இயக்குநர் கபிலன், வேளாண்மை துணை இயக்குநர் மயில்வாகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.